B

# அறிவித்தல்

2015 மாச்சு மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, இந்திய பிரதம அமைச்சர் மேன்மை தங்கிய ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்துவது தொடர்பில் கீழ்க்காணும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இத்தால் சகல கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

- 2013 மாச்சு 12 வியாழக்கிழமை மற்றும் 13 வெள்ளிக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வறைகள், அலுமாரிகளை உள்ளிட்ட பாராளுமன்றக் கட்டிடத் தொகுதி முழுவதும் பாதுகாப்பு அதிகாரிகளினால் சோதனைக்கு உட்படுத்தப்படும்.

- <u>2015 மாச்சு 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை</u>

(அ). இன்றைய தினம் பார்வையாளர் கூடம் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

(ஆ). இன்றைய தினம் பாராளுமன்றத்திற்கு அழைக்கப்பட்ட விசேட விருந்தினர்களைத் தவிர வேறு விருந்தினர்களை அழைத்துக் கொண்டு வரவேண்டாம் என கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

(இ). இன்றைய தினம் பாராளுமன்ற வாகனத் தரிப்பிடம் மூடப்பட்டிருப்பதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்கள் அதற்காக ஒதுக்கப்பட்ட வாகன தரிப்பிடத்துக்குச் செல்லுமாறு பணிக்கப்படும்.

(ஈ). இன்றைய தினம் தமது வாழ்க்கைத்துணையுடன் விஜயம் மேற்கொள்ளும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற பணியாள் தொகுதியினரின் நுழைவாயிலுக்கு அருகில் தமது வாகனத்தை விட்டு இறங்கி பாராளுமன்ற கட்டிடத் தொகுதியினுள் பிரவேசிக்கலாம்.

(உ). இன்றைய தினம் தாமாகவே வாகனங்களை செலுத்தி வருகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களை உரிய தரிப்பிடங்களுக்குக் கொண்டு செல்லும் பணியில் பாராளுமன்ற பணியாள் தொகுதியைச் சேர்ந்த சாரதிகள் ஈடுபடுத்தப்படுவர்.

ஆதலால், இன்றைய தினம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சாரதியுடன் பாராளுமன்றத்துக்கு வருகை தருமாறு மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஊ). இன்றைய தினம் வாகனப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினர் மற்றும் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் ஆகியோரினால் விசேட வாகனப் போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.